செ.வெ.எண்.339/2009/செமதொஅ நாள்:10.10.2009

**திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், சந்தவேலூரில் ரூ.50.00 லட்சம் மதிப்பீல் கட்டப்பட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளி கட்டடத்தை திறந்து வைத்து, 1030 குடும்பங்களுக்கு இலவச வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், சந்தவேலூர் ஊராட்சியில் திரு.அசோக்குமார் மேத்தா குடும்பத்தினரால் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளி கட்டடம் திறப்பு விழா மற்றும் இலவச வண்ணத் தொலைகாட்சி பெட்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு திரு.அசோக்குமார் மேத்தா குடும்பத்தினரால் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு உயர்நிலைப்பள்ளி கட்டடத்தை திறந்து வைத்து, 1030 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிகள் மற்றும் மூவலூர் இராமமிர்த அம்மையார் திருமண உதவித்தொகையாக 36 பயனாளிகளுக்கு ரூ.6.45 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கி விழாப்பேரூரையாற்றியதாவது,

சந்தவேலூர் அசோக்குமார் மேத்தா குடும்பத்தினர் ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் சொந்த செலவில் பள்ளி கட்டடத்தை கட்டி தந்துள்ளார். பணவசதி படைத்தவர்கள் எல்லாம் கொடுக்கமாட்டார்கள். மாணவர்கள் சிறப்பாக படித்திட வேண்டும் என்பதற்காக மனமுவந்து இதை கட்டி தந்துள்ளார்கள். இந்த குடும்பத்தினரை ஊர் பொதுமக்கள், ஊராட்சி மன்றத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர், நானும் சேர்ந்து அவர்கள் குடும்பம் எல்லா வளமும் பெற்று வாழ்ந்திட வேண்டும் என மனதார வாழ்த்துகின்றோம். இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக 9100 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளார். கல்வியில் கேரளா முதல் மாநிலமாக விளக்குகிறது. தமிழகம் கல்வியில் முதல் மாநிலமாக விளங்க வேண்டும் என்பதற்காக புதிய பள்ளி கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களால் 40 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என தமிழகம் முழுவதும் 50 ஆயிரம் ஆசிரியர்களை பணியமர்த்தி நிரப்பப்பட்டுள்ளது. நபார்டு திட்டத்தில் ரூ.770 கோடியில் 849 பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டு அதில் அறிவியல் சோதனை கூடம், கழிப்பிட வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி போன்ற வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் ஏழை-எளிய மாணவர்களுக்கு தரமான கல்வி பெற வேண்டும் என்பதற்காக இதுபோன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் நல்லமுறையில் படிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

சந்தவேலூர் பகுதியில் 103 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் 58 ஊராட்சிகள் உள்ளன. அவற்றில் 55 ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஊராட்சிகளுக்கு விரைவில் வழங்கப்படும். இராமபுறத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் உலக செய்திகளையும், நாட்டு நடப்புகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கியுள்ளார். தமிழகம் முழுவதும் ரூ. 2267 கோடியே 87 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் 80 லட்சத்து15 ஆயிரத்து 321 குடும்பங்களுக்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 72 கோடியே 30 லட்சத்து 13 ஆயிரத்து 348 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

இங்கு சுடுகாட்டு பிரச்சனை குறித்து கோரிக்கை வைத்துள்ளார். அவற்றை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருபெரும்புதூர் பகுதியில் விடுபட்டவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும். திருபெரும்புதூரில் பல்வேறு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டப்பின் இந்த பகுதி வளர்ச்சி அடைந்துள்ளது. சிங்கபெருமாள் கோயில் - வாலாஜா 4 வழிப்பாதையும், ஒரகடம்-திருபெரும்புதூர் 6 வழிப்பாதையும், ஒரகடம் பகுதியில் புதிய மேம்பாலமும் அமைக்கப்படும். 100க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் செயல்பட்டு லட்சக்கணக்கான வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. பணிநியமன தடைச் சட்டம் நீக்கப்பட்டு காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அனைத்து ஊராட்சிகளும் நகர்புறத்தைப் போல் அடிப்படை வசதிகள் பெற வேண்டும் என்பதற்காக 12500 ஊராட்சிகளில் 9000 ஊராட்சிக்கு தலா ரூ.20,000 வழங்கப்பட்டு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு தன்னிறைவு பெற்றுள்ளன. அனைத்து மக்களும் எல்லா வசதிகளும் பெற்று வளமோடு வாழ்ந்திட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அயராது பாடுபட்டு வருகிறார் என கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் சேர்மன் ஜெயின்குருப் ஆப் கம்பெனி, சென்னை திரு.ஆர்.அசோக்குமார் மேத்தா அவர்கள் சிறப்புரையாற்றினார். திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.த.துரைசாமி, ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.டி.இராமன் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். முன்னதாக சந்தவேலூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.பார்வதி சுப்ரமணி அனைவரையும் வரவேற்றார். முடிவில் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் திரு.கே.பாபு நன்றி கூறினார். காஞ்சிபுரம் வருவாய் கோட்ட அலுவலர் திரு.எஸ்.பன்னீர்செல்வம், வட்டாட்சியர் திரு.கந்தசாமி, கல்வி ஆய்வாளர் திரு.சுந்தரவதனம், ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.எஸ்.கே.நிக்கோலஸ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ந.சுரேஷ்குமார், திரு.பிரான்ஸ் மைக்கேல், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.சசிகலா, பள்ளி தலைமையாசிரியர் திருமதி.கு.ரேவதி மற்றும் ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.